செ.வெ.எண்.28 நாள்: 08.07.2017

**திருநெல்வேலி மாவட்டம், அருணாப்பேரி கிராமத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நூல் நூற்பு பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

திருநெல்வேலி மாவட்டம், அருணாப்பேரி கிராமத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நூல் நூற்பு பயிற்சி தொடக்க நிகழ்ச்சி இன்று (08.09.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி நூல் நூற்பு பயிற்சியினை தொடங்கி வைத்தார். அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 3 இடங்களில் கதர் துணி உற்பத்தி அலகும், 5 இடங்களில் கிராமிய நூற்பு நிலையங்களும், 7 இடங்களில் கதர் விற்பனை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றது. 5 கிராமிய நூற்பு நிலையங்களிலும் ஆண்டுக்கு 2.00 லட்சம் சிட்டங்கள் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் 200-க்கும் மேற்பட்ட நூற்பாளர் மற்றும் நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர். தினமும் சுமார் ரூ.150/-க்கு கூலி பெற்று வருகின்றனர். இத்திட்டத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.40.00 இலட்சம் மதிப்பிற்கு 100 ராட்டைகள் மற்றும் 10 தறிகளுக்கு நிதியுதவி பெறப்பட்டு அதனில் முதற்கட்டமாக 100 ராட்டைகள் பெறப்பட்டு கீழ்ப்பாவூர் பகுதியில் அருணாப்பேரி மற்றும் பெருமாள்பட்டி, பத்தமடை, கருப்புக்கட்டி ஆகிய இடங்களிலும் 3 மாத கால நூற்பு பயிற்சி துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மேலும் 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பயிற்சி கால உதவித் தொகையாக ரூ.75/- வழங்கப்படுகின்றது. பயிற்சி முடிந்து நூற்பாளர்களுக்கு சிட்டம் ஒன்றுக்கு ரூ.5.50/- வீதம் கூலி வழங்கப்படும். அத்துடன் நலநிதி 12%-ம் ஊக்க நிதி 10%-ம் வழங்கப்படும். ஒரு நபர் தினமும் 30 சிட்டங்கள் வரை நூற்கலாம். இதனால் தினமும் ரூ.160/-வரை கூலி கிடைக்கும். எனவே, இப்பகுதிகளிலுள்ள மகளிர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கதர் துறை உதவி இயக்குநர் திரு.சுரேஷ், கூட்டுறவு சார் பதிவாளர் திரு.சரவணராஜா, உதவி கதர் அலுவலர் திரு.கோபாலகிருஷ்ணன், கதர் துறை மேலாளர்கள் திருமதி.பேபி கமலா, திரு.ஹென்றி ஜோசப், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ராதா, திரு.ஜனார்த்தனன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி